**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ. பொ.), பல்லடம்**
2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், மாசி 29 ம் நாள்)

**இ.ம.எண்.2/2023**
**in**
**அ.வ.எண்.128/2017**

1. R. பழனியம்மாள் (இறந்து விட்டார்) ... வாதி
2. பாபு
3. சித்ரா ... மனுதாரர்கள்/ வாதியின் வாரிசுகள்

/எதிர்/

1. தங்கவேல்
2. ஆறுமுகம்
3. ராமு
4. அம்சம்மாள்
5. ருக்குமணி
6. சரஸ்வதி
7. மணி
8. வடிவேல்
9. சிவக்குமார்
10. மல்லிகா
11. பழனிச்சாமி

... 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 11 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு,S.அருண்குமார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் 1 முதல் 3 மற்றும் 7 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவீந்திரன், B.SC.,B.L., அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 ம்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இறந்துபோன வாதியின் மனுதாரர்களை 2, 3 வாதிகளாக அசல் வழக்கில் கட்சி சேர்க்க மனுதாக்கல் செய்ய காலதாமதமானதால் ஏற்பட்டுள்ள அபேட்மென்ட்–ஐ நீக்கறவு செய்து உத்தரவிட அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் 22 விதி 9ன் படி மனுதாரர்கள்/வாதியின் வாரிசுகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர்கள், 2 மற்றும் 3ம் வாதிகளாக வழக்கில் கட்சி சேர்க்கப்படவேண்டிய நபர்கள். 1 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதார்கள் அசல் வழக்கில் 1 முதல் 11 பிரதிவாதிகள் ஆவார்கள். வழக்கில் வாதியான பழனியம்மாள் மனுதாரர்களுடைய தாயார். மனுதாரர்களுடைய தாயார் இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில் மனுதாரர்களுடைய தாயார் கடந்த 30.1.2022 ம் தேதி மனுதாரர்கள் இருவரையும் வாரிசுகளாகவும், சொத்துக்களை அடைகின்ற பாத்தியஸ்தரர்களாகவும் விட்டுவிட்டு இறந்துவிட்டார். இந்நிலையில் தாவா சொத்தில் வாரிசு என்ற முறையில் கூட்டாக சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள். எனவே மனுதாரர்களுக்கு வாரிசு அடிப்படையில் கிடைக்கப்பெற்ற தாவா சொத்தை இந்த எதிரிமனுதாரர்கள்/பிரதிவாதிகளின் கூட்டு சுவாதீனத்திலிருந்து விலக்கியோ, தனி சுவாதீனம் பெற வேண்டியது

அவசியமாய் இருப்பதால் மனுதாரர்களின் தாயார் தாக்கல் செய்த தாவா வழக்கில் மனுதாரர்களை 2, 3 வாதிகளாக கட்சி சேர்க்க வேண்டும், மனுதாரர்கள் 90 நாட்களுக்குள்ளாக மனு தாக்கல் செய்திருக்கவேண்டும். மேற்படி 90 நாட்களானது கடந்த 30.04.2022 ம் தேதியுடன் முடிவு பெற்றது. மனுதாரர்கள் கடந்த 20.06.2022 ஆம் தேதி, அதாவது மனுதாரர்களது தாயார் இறந்து 142 நாள் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 3ன் படி மனுதாரர்களை வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியும், இந்த வழக்கு வாதிக்கு எதிராக அபேட்மென்ட் நிலையை தற்சமயம் அடைந்துள்ளதால் செட் அசைட் செய்ய வேண்டியும், மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்கண்ட காரணங்களுக்காக செட் அசைட் செய்து கொள்ள உத்தரவாக வேண்டியது மனுதார்களுக்கு மிகவும் அவசியமாய் உள்ளது என்றும் இல்லாத பட்சத்தில் மனுதாரர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்பதே மனுதாரர்கள்/வாதிகளின் மனுவின் சுருக்கம் ஆகும்.

<u>2) 11ம் எதிர்மனுதாரர்/11ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1முதல் 3 மற்றும் 7, 8, 9, 10 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் உரை சுருக்கம்:-</u>

மனுதாரர்களின் மனு பொய்யானது, சட்டப்படியாக நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும். வாதி பழனியம்மாள் மனுதாரர்களின் தாயார் என்பது உண்மை பழனியம்மாள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பொய்யான காரணங்களை சொல்லி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது பழனியம்மாள் இறந்துவிட்டார் என்பது உண்மை. மேலும் மனுதாரர்களை வாரிசுகளாகவும் சொத்துக்களை அடைகின்ற பாத்தியஸ்தர்களாகவும் விட்டுவிட்டு

காலமாகிவிட்டார் என்பது பொய்யான சங்கதி. மனுதாரர்களது தாயார் இறந்த பின்பு தாவா சொத்து வாரிசு என்ற முறையில் மனுதாரர்கள் கூட்டாக சுவாதீனத்தில் எதிர்மனுதாரர்களுடன் இருந்து வருகிறார்கள் என்பது பொய்யான சங்கதி. பழனியம்மாள் கடந்த 30.01.2022 ம் தேதியில் இறந்து விட்டார். இறந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட வில்லை என்ற ஒரே காரணத்துக்காக மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யத்தக்க ஒன்று. மேலும் 90 நாட்களுக்குள் இந்த மனு தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி வாப்பஸ் ஆகிவிட்டதாக அர்த்தம். மேலும், வாதி இறந்து 141 நாட்கள் கழித்து மேற்படி மனு கடந்த 20.06.2022 ம் தேதியில் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. மேலும் மனுதாரர் வேண்டுமென்றே இ.ம.எண். 01/2023 தாக்கல் செய்துவிட்டு மேற்படி வழக்கை கால தாமதம் செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்பதே எதிர்மனுதாரரின் எதிருரைச் சுருக்கம்.

3) தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரசச்னை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதேயாகும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5) தீர்வு:–</u>

6) மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் வாதியாகிய பழனியம்மாள் மனுதாரர்களின் தாயார் என்றும் அசல் வழக்கினை பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் பழனியம்மாள் 30.01.2022 அன்று தங்களது வாரிசுகளாக விட்டுவிட்டு

இறந்துவிட்டதால் அசல் வழக்கில் மனுதாரர்கள்/ப்ரோப்போஸ்ட் பார்டி ஆகிய மனுதாரர்களை 2, 3 வாதிகளாக சேர்க்க வேண்டும் என்றும் 90 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யாததால் வாதிகளுக்கு எதிராக ஏற்பட்ட அபேட்மெண்டை செட் அசைடு செய்யுமாறு சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் பழனியம்மாள் கடந்த 30.01.2022 அன்று இறந்து விட்டார் என்பது உண்மை என்றும் மனுதாரர்கள் தாயார் இறந்த பின்பு தாவா சொத்தின் வாரிசுகள் என்ற முறையில் கூட்டாக இருந்து வந்ததாக சொல்வது பொய் என்றும் 142 நாட்கள் கழித்து இம்மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7) வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது வாதி பழனியம்மாள் என்பவரால் பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கில் கடந்த 18.06.2018 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு அசல் வழக்ககில் இன்னும் வழக்கு விசாரணை துவங்கப்படாத நிலையில் உள்ளது. இந்நிலையில் வாதி இறந்து விட்டதால் அவரின் வாரிசுகளாக அசல் வழக்கில் 2, 3 வாதிகளாக இம்மனுதாரர்களை சேர்க்க கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதி இறந்து விட்டார் என்பது உண்மை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர்கள் வாதியின் வாரிசுகள் என்பது எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இறந்துபோன வாதியின் வாரிசுகளான இம்மனுவின் மனுதாரர்களை அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும், இம்மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 142 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட

இ.ம.எண்.1/2023 இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதாலும் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள காலதாமதத்திற்கான காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும், 2, 3ம் எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் இவ்வழக்கில் இறுதியாக தீர்வு காண இயலாது என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.03.12 14:56:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ**
**பல்லடம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.03.12 14:57:09 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**